சென்னை ஜூலை, 30: சென்னை நகர வீட்டு பஞ்சத்தைத் தீர்க்க கமிஷனர் திட்டத்தை கார்ப்ப ரேஷன் ஏற்றது. வீடு கட்டும் போர்டு ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்றும்; அது இன்னும் 10 வருஷ த்தில் உத்தேசமாக ரூ. 25 கோடியால் 50000 வீடுகள் கட்டும் என்றும் கூறினார்.

சென்னையின் ஜனத்தொகை . . . . 14.29 லட்சம்.

ஒரு குடும்பம் 6 பேர் வீதம் என்றால் தேவையான வீடுகள். 238166.

தற்போது குடிசைகள் உள்பட உள்ள வீடுகள் 106000

இனி அமைக்கத் தேவையான வீடுகள் 132166

10 வருஷங்களில் 50000 வீடுகள் கட்டுவது சாமான்யம் அல்ல. ஒரு வீடு கட்டுவதற்கு ரூ. 5000 செலவாகும். இந்த 25 கோடி போதில் 25 சதவீதம் கடன் வாங்கப்படும். பாக்கித் தொகையை ராஜ்ய சர்க்காரும், யூனியன் சர்க்காரும் தரவேண்டும். வீட்டு வாடகை மாதம் ரூ. 23-0-0

* தினமணி 31.7.52 *

[illegible] 8/7/52

தஞ்சை ஜில்லா புயல்: 30.11.52ல் அடித்த புயல் காரணமாக தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் சேத மதிப்பு ரூ. 5 கோடி. மேற்கூறிய புயல் காரணமாக 350 பேர் உயிரிழந்தும், 2603 கால்நடைகள் இறந்தும், 35230 வீடுகள் சேதமடைந்தும் 1,62,412 வீடுகள் அழிந்தும் போயின. நாகையில் கடல் 5 மைல் தூரம் உட்புகுந்து சேதம் அடைந்தன.

புயல் நாகை தாலுக்காவில்: இறந்தவர்கள் 101, இறந்த ஆடுமாடுகள் 3000, குடிசைகள் 26000 சேதமாயின; ஒன்றரை லட்சம் வாழை; 25000 தென்னை; 20000 புளியமரங்கள்; 30000 மாமரங்கள்; 50000 கருவை மரங்கள்; மற்ற சிறு மரங்கள் 40 லக்ஷம். மொத்த இழப்பு ரூ. 3 கோடியே ~~[illegible]~~ 43 லட்சம் சேதத்தின் மதிப்பு: நன்னிலம் தாலுக்காவில் ரூ. 20 லக்ஷம் சேதம்.

இந்தியாவில் இன்ஷூரன்ஸ் கம்பெனி:

1952 அக்டோபர் 7 வரையில் கம்பெனிகளின் எண்ணிக்கை 324. இதில் 222 இந்திய கம்பெனிகள். 102 வெளிநாட்டு கம்பெனிகள். 1951ல் புது பாலிஸிகள் தொகை 452000 இவற்றின் மூலம் உத்தரவாதம் செய்யும் தொகை சுமார் ரூ. 116.46 லட்சம். இதற்காக பிரீமியமாக செலுத்த வேண்டிய தொகை ரூ. 638 லட்சம். சென்ற வருஷத்துடன் ஒப்பிட்டால் 27000 பாலிஸி குறைவு. பாலிஸிகளின் மதிப்பில் ரூ. 192 லட்சம் குறைவு. பிரீமியம் தொகையில் 8 லட்சம் குறைவு. வெளியிடப்பட்ட பாலிஸிகளில், வெளிநாட்டுக் கம்பெனிகள் வழங்கியவை 22000. அவற்றின் மதிப்பு சுமார் ரூ. 1,646 லட்சம். பிரீமிய தொகை ரூ. 96 லட்சம்.
